செ.வெ.எண:25 நாள்:08.08.2017

# பத்திரிகை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தை திறந்தவெளி கழிப்பிடமற்ற மாவட்டமாக 31.10.2017-க்குள் மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி அவர்களின் அறிவுரையின்படி அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறார்கள்.

அதன் ஒருபகுதியாக 09.08.2017 முதல் 15.08.2017 வரை திருநெல்வேலி மாவட்டத்தில் சுகாதார வாரம் கொண்டாடப்படவுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் வட்டார அளவில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரையில் ஒரு பிரிவாகவும், 6-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை ஒரு பிரிவாகவும், 10-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை மற்றொரு பிரிவாகவும் ஆக மூன்று பிரிவுகளாக பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி மற்றும் ஓவியப்போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்படவுள்ளன. வட்டார அளவில், திருநெல்வேலி, தென்காசி மற்றும் சேரன்மகாதேவி ஆகிய கல்வி மாவட்டங்களின் சார்பில் போட்டிகள் நடத்தப்பட்டு அதில் வெற்றி பெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பரிசுகள் வழங்கப்படவுள்ளது.

பொறியியல் கல்லூரி, கலை மற்றும் அறிவியல் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்களுக்கு சுவர் சித்திரம் வரைதல், மீம் கிரியேசன்ஸ் மற்றும் ஒரு நிமிட சுகாதார விழிப்புணர்வு வீடியோ தயாரித்தல் போன்ற போட்டிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. இதில் மீம் கிரியேசன்ஸ் மற்றும் ஒரு நிமிட சுகாதார விழிப்புணர்வு வீடியோ தயாரித்தல் தொடர்பான விபரங்களை **tirunelveli.zsbp@gmail.com** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும், இது குறித்த விபரங்களை தெரிந்து கொள்ள **9791647127 மற்றும் 7373096300** என்ற கைப்பேசி எண்ணுக்கு தொடர்பு கொள்ளவும் தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் மகளிர் பங்கேற்கும் விழிப்புணர்வு கூட்டங்கள், ரங்கோலிப் போட்டி, பேச்சுப்போட்டி மற்றும் குழு பாடல் போட்டிகள் நடத்தப்படவுள்ளன. ஒவ்வொரு ஊராட்சிப் பகுதியிலும் பள்ளி மாணவ மாணவர்கள் மூலம் விழிப்புணர்வு பேரணிகள், பொதுமக்கள் கலந்து கொள்ளும் விழிப்புணர்வு கூட்டங்கள் மற்றும் மனிதச்சங்கிலி ஆகியன நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

மக்கள் தொடர்பு அலுவலகத்தின் மூலம் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு வீடியோ காட்சிகள் திரையிடப்படவுள்ளன. 09.08.2017 முதல் 15.08.2017 வரை ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளிலும் கழிப்பறை பயன்பாட்டினை வலியுறுத்தி ஊரக வளர்ச்சித்துறை மற்றும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மூலம் துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

எனவே, திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து பொதுமக்களும் 09.08.2017 முதல் 15.08.2017 வரையிலான சுகாதார வார கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு அக்டோபர் 2017-க்குள் தங்களது இல்லங்களில் கழிவறை அமைத்து பயன்படுத்தி, திறந்தவெளி மலம் கழிக்கும் பழக்கத்தை நிறுத்தி நமது மாவட்டதை **"திறந்தவெளி கழிப்பிடம் இல்லா மாவட்டமாக"** மாற்றிட பொதுமக்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி